# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 05 திங்கட்கிழமை (19-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:172

# நெடுங்கேணியை படைகள் பிடித்தன!

## நேற்று பெரிய மோதல் இல்லை

கொழும்பு, மே 19

வன்னியில் 'வெற்றி உறுதி' (ஜெய சிகுறு) இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படைகள் ஓமந்தையைத் தொடர்ந்து நெடுங்கேணியை நேற்று முன்தினம் இரவு தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஓமந்தையிலும் நெடுங்கேணியிலும் நேற்று பெரியளவில் சண்டை நிகழ்ந்ததாகத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை. ஆங்காங்கே சிறுசிறு மோதல்கள் இடம்பெற்றதாக வவுனியாவிலிருந்து 'உதயன்' செய்தியாளர் குறிப்பிட்டார்.

வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக வடக்கு நோக்கி முன்னேறிய படைகள் ஓமந்தையையும் —

வலி-ஓயா ஜானகபுரத்திலிருந்து முன்னேறிய படைகள் நெடுங்கேணியையும் —

கைப்பற்றித் தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருப்பதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நெடுங்கேணியைக் கைப்பற்றுவதற்காக கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் படையினர் கடும் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருந்ததாகக் கூறப்பட்டது; புலிகள் படையினருடன் நேருக்கு நேர் நின்று மோதினர்.

அதிகளவு தற்கொலைப் படையினரை புலிகள் பயன்படுத்துவதால் அவர்களை எதிர்கொள்ள படையினர் மிகுந்த கஷ்டப்படுவதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

வன்னிச் சமரில் கடந்த 24 மணி நேரத்தில் 32 படையினர் உயிரிழந்ததாகவும் —

அறுபது படையினர் காயமுற்றதாகவும் —

நேற்றுப் பிற்பகலில் கொழும்பில் வெளியான தகவல் ஒன்று தெரிவித்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 100 படையினர் பலி! 500 பேர் காயம்!!

'ஜெயசிகுறு' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நேற்று ஆறு நாள்கள் கடந்த நிலையில் நூறுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்துள்ளதாகவும் ஐநூறு படையினர் வரை காயமடைந்திருப்பதாகவும் சில வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. தெரிவித்தது.

படையினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து மாறுபாடான தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இதுவரை சுமார் நானூறு படையினர் காயமுற்றிருப்பதாக அநுராதபுரம் ஆஸ்பத்திரி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'யெஸ்.எவ்.எம்.' வானொலி அறிவித்தது. அரசுப் படைகளில் 320 பேர் இதுவரை காயமுற்றிருப்பதாக 'ரோய்ட்டர்' செய்தி தெரிவித்தது.

## புலிகளுக்கு இழப்பு அதிகம் என்கிறது அரசு

வன்னியில் இடம்பெறும் கடும் சண்டையில் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு மிக அதிகம் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இருநூற்றியைம்பது புலிகள் உயிரிழந்துள்ளனர் அல்லது படுகாயமடைந்துள்ளனர் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிரிவித்துள்ளார்.

ஆனால் தமது தரப்பில் மூவர் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' நேற்று முன்தினம் அறிவித்தது. புலிகள் தரப்புக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து அந்த வானொலி நேற்றிரவு தகவல் எதனையும் வெளியிடவில்லை.

நெடுங்கேணிச் சண்டையில் புலிகளின் உளவுப் பிரிவைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம்தான் அடுத்த இலக்கு?

ஓமந்தைக்கு வடக்கேயுள்ள புளியங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கை நேற்று முன்தினம் மாலையே ஆரம்பமாகிவிட்டது என இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

படையினர் பீரங்கிகளின் உதவியுடனும், ஹெலிகளின் உதவியுடனும் புளியங்குளம் பகுதியை நோக்கி மெது மெதுவாக நிதானமாக — முன்னேறி வருகின்றனர்; வீதித்தடைகளையும், பதுங்கு குழிகளையும், நிலக்கண்ணிகளையும் அவர்கள் தாண்டிச் செல்ல வேண்டி உள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## குண்டு வீச்சால் எரியும் காடுகள்!

வன்னிப் பகுதியில் விமானப்படை விமானங்கள் வீசும் குண்டுகளால் காடுகள் பற்றி எரிவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

குண்டு வீச்சால் காடுகள் தீப்பற்றி எரிவதாகவும் —

வேகமாக வீசும் காற்றினால் தீ வேகமாக காடு எங்கும் பரவி மரம், செடி, கொடிகளை சாம்பலாக்குவதாகவும் —

அந்த ஏஜென்ஸி மேலும் குறிப்பிட்டது. புளியங்குளம், கனகராயன்குளம் காடுகளும் விமானப்படையின் நெருப்புக் குண்டுகளால் எரிந்து நாசமாகியிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஐந்து பிளட்டூன்கள் பொலிஸார் விரைவு!

கொழும்பு, மே 19

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் போது படையினர் கைப்பற்றிய பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக ஐந்து 'பிளட்டூன்' பொலிஸார் அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை — முன்னேறும் படையினருக்கு தேவையான இராணுவ சாதனங்களை உடனுக்குடன் அநுராதபுரம் மற்றும் வவுனியாவில் இருந்து அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## வவுனியாவுக்கு வடக்கே உணவுத் தட்டுப்பாடு

லண்டன், மே 19

வவுனியாவுக்கு வடக்குக்கான உணவு விநியோகம் தடைப்பட்டுள்ளமை குறித்து சர்வதேச அமைப்புக்கள் நேற்று முன்தினம் கொழும்பில் கூடி ஆராய்ந்தன.

தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதையடுத்து வவுனியாவுக்கு வடக்கே உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் கூடிய கூட்டத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, ஒக்ஸ்பாம், போரூட், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், கெயர் முதலிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

அப்பகுதிக்கு உணவு அனுப்ப நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அக்கூட்டத்தில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-3)

## 4 டாங்கிகள் அழிப்பு

வன்னியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு எதிராக கடந்த புதன், வியாழக்கிழமைகளில் விடுதலைப் புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல்களில் நான்கு டாங்கிகள் அழிந்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதற்கிடையில் —

ஒட்டுசுட்டான் பகுதியில் விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டதான தகவல் ஒன்று நேற்று மாலை செய்தி ஏஜென்ஸிகளிடையே பரவியது. எனினும் அதனை நேற்றிரவுவரை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (உ)

## தரைப்பாதை ஜூலையிலாம்!

வவுனியா — கிளிநொச்சி நெடுஞ்சாலையை படையினர் கைப்பற்ற சுமார் ஒரு மாத காலம் பிடிக்கும். பின்னர் அப்பகுதியில் தமது நிலைகளை படையினர் பலப்படுத்துவர். அதற்குப் பிறகு ஜூலை மாத முடிவில் கொழும்பில் இருந்து நேரடியாக — தரை வழியாக — யாழ்ப்பாணம் செல்லக்கூடியதாக இருக்கும்.

'லங்காதீப' திங்கள் வார இதழ் இவ்வாறு நேற்று செய்தி வெளியிட்டது.

## முல்லைத்தீவை சுற்றி வளைக்கத் திட்டம்

கொழும்பு, மே 19

வெலிஓயா ஜானகபுரவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் இலக்கு முல்லைத்தீவைச் சுற்றி வளைப்பதுதான்.

படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 53 ஆவது பிரிவு படை அணியில் ஆகாய சஞ்சார பிரிக்கேட், கொமாண்டோ பிரிக்கேட், விசேட படை அணி ஆகியன இடம் பெற்றுள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தம்! அவசரம்!!

வவுனியா படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அடுத்து இரத்தத்துக்கு அவசர தேவை ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் உள்ள மத்திய இரத்த வங்கி அறிவித்துள்ளது.

பலர் இரத்ததானம் செய்து வருவதாகவும்—

இரத்த தானம் செய்ய முன்வருவோரிடமிருந்து இரத்தத்தைப் பெறுவதற்காக மத்திய இரத்த வங்கியில் விசேட செயல்பீடம் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை தொடர்ச்சியாக இயங்குவதாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பிலும் பிற இடங்களிலும் சேகரிக்கப்படும் இரத்தம் உடனுக்குடன் வவுனியா, அநுராதபுரம் ஆஸ்பத்திரிகளுக்கும் மற்றும் யுத்தமுனைகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. (உ-3-21)

## வவுனியா ஆஸ்பத்திரி டாக்டர்கள் லீவு ரத்து!

கொழும்பு, மே 14

வன்னியில் அரசுப் படைகள் ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கையை அடுத்து வவுனியா ஆஸ்பத்திரியில் பணியாற்றும் டாக்டர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

அந்த ஆஸ்பத்திரியில் பணியாற்றும் 3 வைத்திய நிபுணர்களையும் கூட தயார் நிலையில் இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

வவுனியா செனி. ஜோசப் வித்தியாலயத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றைப் படையினர் அமைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3 150)

## அ' புரம் ஆஸ்பத்திரி முழுத்தயார் நிலையில்!

காயமடையும் படையினருக்கு சிகிச்சையளிப்பதற்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரியும் முழுத்தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரதி சுகாதார அமைச்சர், பவித்திரா வன்னியாராய்ச்சி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அல்லையம்பதி

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி

கோயில்

## வருடாந்த தேர்த்திருவிழா - 1997

காலம்:- 20- 05- 97 செவ்வாய் காலை 9. 00 மணி
விசேட மங்கள இசை
கானமூர்த்தி சுந்தரமூர்த்தி குழுவினர்
உதயசங்கர் குழுவினர்
21- 05- 97 புதன் காலை 11 00 மணி தீர்த்த உற்சவம்
மஹோற்சவம்
சிவப்பிரம்மஸ்ரீ ராம் – கெங்காதர குருக்கள்
சாரதாபீடம் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது
அனைவரும் வருக!

தேர்த்திருவிழா உபயகாரர்

(47226)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 15 | | 19 |
| 03 | | 05 |
| 1935 | | 1996 |



## திருமதி பாமு றோசம்மா

பாசத்தைப் பொழிந்து அன்புடன் வளர்த்து
நெஞ்சங்களில் என்றும் நீங்காத நினைவுகளுடன்
எம்மை விட்டுப் பிரிந்துள்ள அம்மாவே!
உமைப்போன்ற தாயைக் காண்போமோ வென
ஏங்கித் தவிக்கும் எங்களுக்கு இனி
ஆதரவு உலகில் உண்டோ அம்மா!

செல்வம் (மகன்)
வெற்றிலைக் கடை,
மத்திய சந்தை,
யாழ்ப்பாணம்.

உடுவில். (47030)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி சந்திரன் ஜெயராணி

அன்னை மடியில்: 15-03-1968 ஆண்டவன் அடியில்: 19-05-1996

பாசமும் பரிவும் காட்டிய அன்புத் தெய்வமே!
நாம் நினையா வேளையில் பிரிந்து சென்றீரே
விண்ணுலகம்.
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்டீரே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், அம்மா, அப்பா,
அண்ணன், அக்காமார், அண்ணி, மருமக்கள்.

இல 10, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். (47025)

## முழு நேர ஆங்கில பயிற்சி நெறி

வலிகாமம் தெற்கு, மே 19

யாழ். கல்வித் திணைக்கள வலயம் இரண்டின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படவுள்ள முழுநேர ஆங்கிலப்பாடப் பயிற்சி நெறிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கப் படவுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கென விண்ணப்பித்தவர்களில் இராமநாதன் கல்லூரியில் பயிற்சியை மேற்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகளை அங்கு வருகைதருமாறு கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

ஐ-152)

## நாலந்தவின் தாயாருக்கு எம்.பி. பதவி

கொழும்பு, மே 19

அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட — இரத்தினபுரி மாவட்ட — எம். பியான நாலந்த எல்லாவெலவின் தாயாரான சுரங்கனி எல்லாவெலவை தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முடிவு செய்துள்ளது.

இவரை நாடாளுமன்ற உறுப்பினராக்குவதாயின் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேசிய பட்டியல் எம். பிக்களில் ஒருவர் பதவி விலகி வழி விட்டுக் கொடுக்க வேண்டும். அப்படி வழி விட்டுக் கொடுப்பவர் யார் என்ற விடயம் முன்னணியில் பிரச்சினையை தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-150-3)


## தொடர்பு கொள்ளவும்

யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட கலைப் பிரிவு மாணவி
செல்வி
சிவரஞ்சனி மார்க்கண்டு
தயவுசெய்து உடனடியாக
செல்வி சு. கனகரத்தினம்
44/3 A, மணல்தரை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
என்ற முகவரியில்
தொடர்பு கொள்ளவும்.
(47023)



A/L 97/96
DAY
பொருளியல்
பகுதி II
வினா விடை
By
திரு. சண்
ஆரம்பம்:
20 5-97 (11 மணி)
N. C. C. A
யாழ்ப்பாணம்.
(47020)


## தவறிவிட்டது

யோகராஜா வாசுகி, காம் றோட், Kayts (ஊர்காவற்றுறை) ஆகிய எனது 635514388 V இலக்க அடையாள அட்டை யாழ். பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து காணாமற் போயுள்ளது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(47028)


## சிங்கன் தையல் இயந்திர கடை

19-05-97 திங்களில் இருந்து ஆரம்பிக்கப்படும்

சிங்கர் கறுப்பு வெள்ளை தையல் இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்கள் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படுவதுடன் உதிரிப்பாகங்களும் விற்பனை செய்யப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
கே. கே. எஸ். வீதி,
யா/ இணுவில் மத்திய கல்லூரி அருகில்.
(47225)


# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை மனோரஞ்சன் (ரஞ்சன்)

சங்குவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை - மனோரஞ்சன் 18-5-97 (ஞாயிற்றுக்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி அகிலேஸ்வரியின் பாசமிகு கணவரும், மலர்வேந்தன் (மாணவன் - மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஜெகதா, ராகவன் [உடுவில் மகளிர் கல்லூரி], பிரசானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சங்குவேலி தெற்கு செல்லத்துரை தம்பதிகளின் அன்பு மகனும், கொடிகாமம் சதாசிவம் தம்பதிகளின் மருமகனும், சிவசோதிமலர், மனோகரன், ஜெகநாதன் (லண்டன்), ஈஸ்வரன் [ஈசன்], ஜெகதீஸ்வரி, மகிழ்ராஜன் [பாபு ஹொலண்ட்], வளர்மதி [தொழில் நுட்பக்கல்லூரி கொக்குவில்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோமசுந்தரம், ராஜேஸ்வரி, திகழ்மதி [லண்டன்], கணேசமூர்த்தி, திருச்செல்வம், புஸ்பராணி, அருட்செல்வம், தவச்செல்வம், விஜயராணி, குணச்செல்வம் [கிராம சேவையாளர்], பத்மினிதேவி, பஞ்சலிங்கம், கௌரிதேவி [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 — 05 — 97 இன்று முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
செ. ஈஸ்வரன் (ஈசன்)

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (47017)

## நா. ச. வைத்தீஸ்வரன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை 62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், 'கமலவாசா' அராலி கிழக்கை வதிவிடமாகக் கொண்டவரும், முன்னைநாள் சினிமாஸ் நிறுவன கணக்காளருமாகிய நா. ச. வைத்தீஸ்வரன் 17 - 05 - 97 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் — நல்லம்மா தம்பதிகளின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற Dr. ஆறுமுகம் — சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கராணியின் அன்புக் கணவரும், பகீரதி, ராஜ்குமார், ராஜரஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வள்ளிநாயகி, வாலாம்பிகை, நீலாயதாட்சி, காலஞ்சென்ற சர்வலோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரியகுமார், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறீஸ்கந்தராஜா, இரட்ணராஜா, விக்னராஜா, காலஞ்சென்ற அரியரட்ணம், யோகராசா, பினாகபாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கார்த்திக், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் புதன் கிழமை மாலை 4 மணிக்கு வத்தளையில் நடைபெறும்.

தகவல்:
திருமதி பி. நீலாயதாட்சி
(சகோதரி)

62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (47026)

## திருமதி தம்பிராசா பொன்னம்மா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா பொன்னம்மா 18-05-97 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், சிவலிங்கம் (பிரதான தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), திலகராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற லலிதராணி, காலஞ்சென்ற ஜெயராணி ஆகியோரின் அன்புத்தாயாரும், மகாலிங்கம் (ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி, வேலணை), லோகாம்பிகை, காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், மகிதரன் (மருத்துவபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), மகிதினி (ஆசிரியை), சிவதரன் (யாழ்ப்பாணக் கல்லூரி), கேதீஸ்வரன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று திங்கட்கிழமை 2.00 மணியளவில் நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
த. சிவலிங்கம் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொங்கோ ஜனநாயகக் குடியரசு

# கபீலாவின் தலைமையில் உதயம்!

## புதிய அரசமைப்பு விரைவில்



கின்ஸாசா, மே 19

லோறன் கபீலா தலைமையிலான கிளர்ச்சிக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்து ஸயர் நாட்டின் பெயர் "கொங்கோ ஜனநாயகக் குடியரசு" என மாற்றப்பட்டிருக்கிறது. அதன் அதிபராக தன்னைத்தானே லோறன் கபீலா பிரகடனப் படுத்தியுள்ளார்.

ஸயரில் இடம் பெற்ற ஆட்சி மாற்றத்தை அயல் நாடுகளான தென்னாபிரிக்கா, தன்சானியா, அங்கோலா மற்றும் பிரான்ஸ் உட்பட பல நாடுகள் வரவேற்று அங்கீகரித்துள்ளன.

தலைநகர் கின்ஸாசாவின் பெரும்பாலான பகுதிகளை கிளர்ச்சிப்படைகள் தங்கள் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததை அடுத்து இன்னும் 72 மணித்தியாலங்களுக்குள் தேசத்தை மீட்டெடுக்கும் இடைக்கால அரசு அமைக்கப்படும் என்று லோறன் கபீலா அறிவித்தார்.

தற்போதுள்ள அரசமைப்புச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்படுவதாகவும் புதிய அரசமைப்பு இன்னும் இரு மாத காலத்தில் அமைக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

பெல்ஜியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து கொங்கோ என அழைக்கப்பட்டு வந்த பெயரை 1971 இல் பதவிக்கு வந்த அதிபர் முபுட்டு ஸயர் என மாற்றினார்.

ஆபிரிக்காவின் மூன்றாவது பெரிய நாடாக விளங்கும் ஸயருக்கு அங்குள்ள பெரிய நதியான ஸயர் நதியின் பெயர் சூட்டப்பட்டது.

தலைநகரில் பெரும்பாலும் ஸ்திரமான நிலை ஏற்பட்டு விட்ட போதிலும் அரசுப் படையினர் இன்னமும் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்று அஞ்சப்படுவதாக செய்திகள் வெளியாகின.

எஞ்சியுள்ள அரச படைப் பிரிவுகளின் தளபதிகளுடன் இணக்கமான முறையில் செல்ல விருப்பம் தெரிவித்துள்ள கபீலா அவர்கள் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்றும் எச்சரித்துள்ளார். (ஐ)

### நிலக்கண்ணிக்கு 5 பொலீஸார் பலி!

புதுடில்லி, மே 19

ஆந்திரப் பிரதேசத்தில் மக்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிலக்கண்ணித் தாக்குதலில் 5 பொலீஸார் பலியாகினர்.

தடைசெய்யப்பட்ட மக்கள் போர்க்குழுவினரே இத்தாக்குதலை நடத்தியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (ஐ)

## மொறோக்கோ நாட்டில்

## குடும்பத்துடன் முபுட்டு ஹோட்டலில் தஞ்சம்

ரபாத், மே 19

தலைநகர் கின்ஸாசாவில் இருந்து தப்பியோடிய அதிபர் முபுட்டுவும், அவரது மகன் மனைவி மற்றும் நெருங்கிய உறவினர்கள் ஆகியோர் மொறோக்கோ நாட்டின் தலைநகர் ரபாத் போய்ச் சேர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கபூன் நாட்டுக்குச் சொந்தமான மூன்று விமானங்கள் இவர்களை ஏற்றிக் கொண்டு ரபாத் விமான நிலையத்தில் வந்திறங்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

50 அறைகள் கொண்ட ஹோட்டல் ஒன்றில் முன்னாள் அதிபர் முபுட்டுவும், உறவினர்களும் தங்கியிருப்பர் என்று மொறோக்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தலைநகரில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் அத்திலாந்திக் கரையோரத்தில் அமைந்துள்ள இந்த ஹோட்டலில் முபுட்டுவும் அவரது உறவினர்களும் எவ்வளவு காலம் தங்க அனுமதிக்கப்படுவர் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ஐ)

## தென் கொரிய அதிபரின் மகன் ஊழல் விவகாரத்தில் கைது!

தென் கொரிய அதிபர் கிம்யொங் சங்கின் மகன் ஒருவர் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 5 ஆண்டுகால சிறைத் தண்டனை வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகத் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை தென் கொரிய அதிபர் வெளியிட்டுள்ளார்.

ஊழலை வேரோடு களையும் நடவடிக்கையில் இருந்து தப்பிக் கொள்ள வசதியாக எவருக்குமே பாகுபாடு காட்டப்பட மாட்டாது என்று அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

அதிபரின் மகன் அரச விவகாரங்களில் தலையிடுவதாக கடந்த 4 ஆண்டுகளாக அடிபட்டு வந்த ஊகங்கள் இதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள பெரிய இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் நட்டம் ஏற்பட்டு சொத்துக்கள் திவாலாகியதை அடுத்து அதிபரின் மகன் மீது நேரடியாகவே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வந்தன.

30 லட்சம் டொலருக்கு அதிகமாக வர்த்தகர்களிடமிருந்து நிதி பெற்றதாகவும் வரி விடயங்களில் முறைகேடாக நடந்ததாகவும் அரச வழக்கறிஞர்கள் கூறியதை அடுத்து தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

### உலக அரங்கில்

### விமானம் தகர்ப்பு

விமானங்களின் களஞ்சியப் பகுதிகளில் மறைத்து வைக்கப்படும் வெடிகுண்டுகளில் இருந்து விமானங்களைப் பாதுகாக்கும் பரிசோதனையில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் நிபுணர்கள் "போயிங் 747" ரக ஜம்போ ஜெற் விமானத்தை தகர்த்துள்ளனர்.

இந்தப் பரிசோதனை முயற்சிக்காக 4 குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன

### பாப்பரசர் பிறந்த நாள்

வத்திக்கான், மே 19

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் 77 ஆவது பிறந்த நாள் நேற்றாகும்.

இதனை ஒட்டிய விசேட வைபவங்கள் எதுவும் கொண்டாடப்படவில்லை என்று வத்திக்கானில் தெரிவிக்கப்பட்டது.

### ஐ. நா. செயலர் கண்டனம்

நியூயோர்க், மே 19

சுமார் 10 ஆயிரம் துருக்கி நாட்டுத் துருப்புக்கள் வட ஈராக்குக்குள் ஊடுருவியிருப்பதை ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் கண்டித்துள்ளார்.

தொளாயிரத்துக்கு மேற்பட்ட குர்திஷ் பிரிவினைவாதிகளை துருக்கியப்படையினர் கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

### அமெரிக்க கொள்கை மீது அதிருப்தி

அமெரிக்க மத்திய கிழக்கு அமைதி முயற்சி தொடர்பான தனது கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று பலஸ்தீன நிர்வாகம் வலியுறுத்தியுள்ளது.

கிழக்கு ஜெருஸலேமில் யூதக் குடியிருப்புத் திட்டத்தை நிறுத்துமாறு இஸ்ரேலை வற்புறுத்த அமெரிக்கப் பிரதிநிதி தவறிவிட்டார் என்று பலஸ்தீன நிர்வாகம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ)

## கோழித் தீன் விலை உயர்வு

யாழ்ப்பாணம், மே 19

குடாநாட்டில் கோழித்தீனின் விலை அதிகரித்துள்ளதால் கோழி வளர்ப்போர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் 685 ரூபாவாக விற்பனையாகும் கோழித்தீன் இங்கு இரு மடங்குக்கும் அதிகமான விலையில் விற்பனையாகின்றன.

இதேவேளை முட்டையின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்நிலையில் கோழி வளர்ப்புத் தொழிலை நம்பி இருப்போர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

(ஐ-15)

## பிந்திக் கிடைக்கும் வர்த்தமானிகள்

நவாலி, மே 19

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களுக்கும் தபாலகங்களுக்கும் வர்த்தமானிகள் காலதாமதமாகக் கிடைப்பதனால் இங்குள்ள படித்த இளைஞர் யுவதிகள் பல வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க முடியாதுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய வர்த்தமானிகள் யாழ். செயலகம் உட்பட பல திணைக்களங்களுக்கு கடந்த வாரமே வந்து சேர்ந்துள்ளன. இவற்றைப் பார்வையிட்ட பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காண முடிகிறது. (ஐ-100)

## அதிபர்களுக்கு அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 19

யாழ். வலயம் இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள் தங்கள் பாடசாலைகளுக்கு மேலதிகமாகத் தேவைப்படும் சீருடைகள் பற்றிய விவரத்தை அவற்றின் வகை தொடர்பான பூரண விளக்கத்துடன் சேர்த்து இன்று நண்பகல் 12 மணிக்கு முன் அனுப்பி வைக்குமாறு யாழ். கல்வித் திணைக்கள கணக்காளர் கேட்டுள்ளார்.

கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு மேலதிக சீருடைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த விவரங்கள் அவசரமாகத் தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உரிய விவரங்களைத் தரத் தவறும் பாடசாலைகளுக்குத் தேவையான மேலதிக சீருடை பின்னர் வழங்கப் படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## ஆங்கில ஆசிரியருக்கு 3 மாத விசேட பயிற்சி

பருத்தித்துறை, மே 19

ஆங்கில ஆசிரியர்களுக்கான விசேட மூன்று மாத காலப் பயிற்சியை வழங்க தேசிய கல்வி நிறுவனம் முன்வந்துள்ளது. பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களும், ஆங்கிலத்தை பட்டப்படிப்புக்கு ஒரு பாடமாகக் கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆசிரியர் சேவை 3-I இல் இருந்து ஆசிரியர் சேவை 2-II-க்குச் செல்வதற்கு இப்பயிற்சி அவசியமானதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் வலயக் கல்வித் திணைக்களங்களில் மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-118)

### தையற் பயிற்சி

குருநகர், மே 19

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் தையற் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பமாக இருப்பதாக அதிபர் மு. செல்லையா தெரிவித்தார்.

ஆண்டு 8 சித்தியடைந்த இருபாலாரும் இப் பயிற்சி நெறிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். (ஐ-51)

### மருதம் சஞ்சிகை

தென்மராட்சி கல்விக் கோட்ட விவசாய ஆசிரியர் ஒன்றியத்தினால் 'மருதம்' என்னும் மாத சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கடந்த 12 ஆம் திகதி இடம் பெற்ற இச் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மஜோதி முத்தையா ஜெயந்தி தினம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ். இந்துசமயப் பேரவையின் முன்னாள் தலைவர் ஆத்மஜோதி நா முத்தையாவின் ஜெயந்தி தினம் நாளை மறுதினம் புதன்கிழமை கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அங்குள்ள நடராஜப் பெருமான் ஆலயத்தில் விசேட மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ஐ)

## கைதடியில் வர்த்தகக் கிளை

நவாலி, மே 19

கைதடியில் வர்த்தகத் திணைக்களத்தின் கிளையொன்று கடந்தவாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

## சந்நிதியில் வைகாசிப் பெருவிழா

வடமராட்சி, மே 19

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோயில் சந்நியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த வைகாசிப் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நல்லை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் பேரவைத்தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ருபானந்தாவும் சிறப்புவிருந்தினராக ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர் முருகேசம்பிள்ளையும் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக கலை பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் 'ஆறுமுகமான பொருள்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்தசர்மா ''மானம் காத்த கண்ணன்'' எனும் தலைப்பில் தெய்வீகச் சொற்பொழிவு வழங்குவார். (ஐ-173)

## கொட்டடியில் அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், மே 19

ஜே — 81 கோட்டை, ஜே — 83 கொட்டடி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான ஒரு தொகுதி விசேட அடையாள அட்டைகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையே கொட்டடி பாதுகாப்புப்படை முகாமில் வைத்து விநியோகிக்கப்படவிருப்பதாக கிராம உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

* * *

யாழ்ப்பாணம், மே 19

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் கிழக்கு (ஜே — 197), சுன்னாகம் வடக்கு (ஜே — 195) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று திங்கட்கிழமை மயிலணி வீதியில் உள்ள சுன்னாகம் கிழக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளன. (ஐ)

## புலோலி கமநல சேவை நிலையம்

## கிருமிநாசனி, உரம் விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 19

புலோலி கமநல சேவைகள் நிலையம் மூலம் அப்பகுதி விவசாயிகளுக்கு சிறுபோகச் செய்கைக்குத் தேவையான உரவகைகள், கிருமிநாசனி வகைகள் என்பன விநியோகிக்கப்பட்டு வருவதாக புலோலி, அம்பன், புத்தூர் கமநலசேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் புலோலி கமநல சேவைகள் நிலையம் விவசாயிகளுக்குத் தேவையான விவசாய தெளிகருவிகளை வழங்கி வருகின்றது.

நீரிறைக்கும் இயந்திரங்கள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டு கொழும்பு விலைக்கே வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

வடமராட்சிப் பகுயில் தற்போது விவசாயிகள் அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. (ஐ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 06 — 01 — 1933



மறைவு: 19 — 04 — 1997

### அமரர் முத்துத்தம்பி அரியநாயகம்

(துர்க்கா மில் உரிமையாளர் கல்வயல்)

தந்தையே அன்பின் ஒளிவிளக்கே!
பண்பின் சிகரமே பாசத்தின் உறைவிடமே!
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயிலில் போனதேனோ?
நித்தமும கலங்குகிறோம்.

அன்னார் இறந்த செய்தி அறிந்து அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று 19 - 05 - 97 (திங்கள்) அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (47014)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



### அமரர் மயில்வாகனம் வாரித்தம்பி

(ஓய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்)

அன்னை மடியில்: 08-05-1929
அரனடியில்: 19-04-1997

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
பொறுப்பு மிகு குடும்பத் தலைவனாய்
சிறந்த கூட்டுறவாளனாய், கணக்காய்வாளனாய்
யாவருக்கும் வழிகாட்டியாய், நித்தம்
அரனடி தொழும் பக்தனாய் இருந்த
எம் அன்புத் தெய்வம் திடீரெனப் பிரிந்தீரே
தாங்காது தவித்து நிற்கின்றோம்.

எமது குடும்பத் தலைவர் இரவு வேளையில் நோயுற்றபோது உடன் வந்து உதவிய அயலவர், நண்பர்கள், உறவினர்களுக்கும், வைத்தியர் அவர்களுக்கும் எமது துயரில் கலந்து கொண்டு பல உதவிகளைச் செய்தோருக்கும், அனுதாபச் செய்திகள், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், மைத்துனர்
பேரமக்கள், பேரப்பிள்ளைகள்.

'பரணி'
மீசாலை வடக்கு,
கொடிகாமம். (47002)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராஜசிங்கம் இராஜமனோகரன்

(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

தோற்றம்: 07 - 07 - 1934
மறைவு: 25 - 05 - 1991

திதி: 19 - 05 - 1997

வீட்டின் ஒளிவிளக்காய் இருந்து திடீரென எங்களை விட்டுப் பிரிந்த அப்பாவின் ஆத்மா சாந்தியடைய காசி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

'இராஜகிரி' தெல்லிப்பழை. (47003)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 — 12 — 1941



மறைவு: 22 — 05 — 1994

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் அம்பிகாபதி பாலசுந்தரம்

(வடக்கு - கிழக்குமாகாண உள்ளூராட்சிஎழுதுவினைஞர் சங்கத்தலைவரும், வவனியா நகரசபை உள்ளகக் கணக்காய்வாளரும்)

திதி: 19 - 05 - 97

முகம்பார்த்து மூன்றாண்டு கழிந்ததையா
கண்களில் உங்கள் முகம் நிழலாடுதையா
காலமே! அவரைக் காற்றோடு கலந்திட்டாயா
காற்றே! எம்கதை அவருக்குக் கூறாயோ
விதியே! உன் சதியால்
நெஞ்சங்கள் நினைவுகளால் கனக்கின்றன.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்புத்தாய், அருமைமனைவி, பிள்ளைகள்.

72, மானிப்பாய்றோட்,
ஆனைக்கோட்டை. (46929)


- உருவப்படங்கள்
- வர்ணசித்திரங்கள்
- விளம்பர போர்டுகள்
- லேஅவுட் டிசைன்
- பானர் & கட் அவுட்
- நம்பர் தகடுகள்

செய்ய

கோபால் ஆட்ஸ்

139, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
(44579)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பிளயரின் அலுவலகம் முன்
# லண்டன் தமிழர் விழிப்பு போராட்டம்

லண்டன், மே 19

ஈழத் தமிழர்களின் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்று வலியுறுத்தி லண்டனில் நேற்று முன் தினம் விழிப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

பிரதமர் ரொனி பிளயரின் அலுவலகத்துக்கு முன்பாக 'தமிழர் மனித உரிமை மையம்' என்ற அமைப்பு இந்தப் போராட்டத்தை நடத்தியது.

சிறுவர்கள், பெரியோர்கள் உட்பட முந்நூறுக்கு மேற்பட்டோர் இந்த விழிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் முடிவில் பிரதயர் ரொனி பிளயரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப் பட்டது.

தமிழ் மக்கள்மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளுய மனித உரிமை மீறல்களைக் கண்டிக்குமாறும், ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுத உதவிகள் வழங்கப்படக் கூடாது என்றும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. (ஐ-5)

## காரைநகர் வேரம்பிட்டிபகுதியில் மக்கள் சென்று குடியமர அனுமதி

நெடுந்தீவு, மே 19

காரைநகர் வாரிவளவுபகுதியில் இதுவரை தங்கவைக்கப்பட்டிருந்த வேரப்பிட்டியைச் சேர்ந்த பதினைந்து குடும்பங்கள் மீண்டும் தங்களது சொந்தப் பகுதியான வேரப்பிட்டியில் குடியேற காரைநகர் கடற்படை அதிகாரி அனுமதி வழங்கியுள்ளார்.

கடற்படைக் கட்டளை அதிகாரியுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் கலந்துரையாடியதைத் தொடர்ந்து கடற்பகுதியில் இருந்து குறிப்பிட்ட தூரம் தவிர்ந்த ஏனைய இடங்களில் இந்தக் குடும்பங்கள் குடியிருக்கவும் அப்பகுதியில் உள்ள பாடசாலையைத் திறக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ-111)

### வெங்காயம், மரக்கறி வகைகளை
## பொதி செய்யும் பெட்டிகள் பனை மட்டையில் தயாரிப்பு

யாழ்ப்பாணம், மே 19

இங்கிருந்து கப்பல் மூலம் அனுப்பப்படும் வெங்காயம் மற்றும் பழவகைகள் மரக்கறி என்பவற்றைப் பாதுகாப்பாக அனுப்புவதற்கு வசதியான பெட்டிகளைத் தயாரிப்பதற்கு பனம் மட்டைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பகுதியில் இதனைத் தொழிலாகக் கொண்டுள்ள சிலர் பெருமளவில் பனம் மட்டைகளை வாங்கிப் பெட்டிகளைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பனம் மட்டைகளில் எஞ்சிய பாகங்கள் சாக்குக் கணக்கில் விறகுத் தேவைக்காக விற்பனை செய்யப்படுகின்றன.

பெட்டிகளைத் தயாரிப்பதற்கான பலகைகளைப் பெறுவது கடினமாக உள்ளதால் அவற்றுக்குப் பதிலாக பனம் மட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன, பலகைகளைவிட இதன் மூலம் பெட்டிகளைத் தயாரிப்பதற்கு ஆகும் செலவு மிகக் குறைவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-15)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் திருத்த வேலைகள் ஆரம்பம்

தென்மராட்சி, மே 19

கடந்த பல வருடங்களின் பின்னர் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுகள், விடுதிகள் சமையலறை போன்றவை பல லட்சம் ரூபா செலவில் திருத்தப்படுகின்றன.

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு இத் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை—ஆஸ்பத்திரியின் பின் பக்க வேலி அகற்றப்பட்டு மதில் கட்டப்பட்டு வருகிறது.

சமையலறை திருத்த வேலை நடைபெறுவதால் வேறொரு இடத்திற்கு சமையலறை தற்காலிக்மாக மாற்றப்பட்டுள்ளது. (ஐ-117)

## பழுதடைந்த பேரீச்சம்பழம் விற்பனையாவது கண்டுபிடிப்பு

பருத்தித்துறை, மே 19

மந்திகைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பாவனைக்கு உதவாத பேரீச்சம்பழம் விற்பனை செய்யப்படுவதை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவு நுகர்வோர் பாதுகாப்புக்கழகம் கண்டுபிடித்துள்ளது.

பழுதடைந்த பேரீச்சம்பழம் பிரஸ்தாப கடையில் விற்பனையாவது பற்றித் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே நுகர்வோர் பாதுகாப்பு கழக உறுப்பினர்கள் அங்கு சென்று பேரீச்சம்பழத்தை வாங்கிப் பரிசோதித்து அவை பழுதடைந்திருந்ததைக் கண்டு பிடித்தனர். இது தொடர்பாக மேற்படி வர்த்தக நிலையத்தின் முகாமைப் பகுதியினருக்கு நுகர்வோர் பாதுகாப்புக் கழகம் முறைப்பாடு செய்தது. (ஐ-118)

## பாடசாலை செல்லாத மாணவர் விவரம்
### கல்வித் திணைக்களம் சேகரிப்பு

பருத்தித்துறை, மே 19

யாழ். மாவட்டத்தில் கடந்த நான்கு மாத காலப் பகுதியில் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்காத மாணவர்களின் விவரங்களை யாழ். கல்வித் திணைக்களம் சேகரிக்கவுள்ளது.

கடந்த ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான பாடசாலை நாள்களில் 40 சதவீதத்துக்கு மேற்பட்ட நாள்கள் பாடசாலைக்கு வருகை தராத மாணவர்களின் விவரங்களை திரட்டி அனுப்பி வைக்குமாறு யாழ். வலயம் இரண்டின் பாணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் வரவில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டு வருவதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-118)

## சமய சந்நிதிகளில்

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம் பெறும்.

(ஐ-111)

★ ★ ★

பருத்தித்துறை, மே 19

மந்திகை அருள்மிகு அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(ஐ-118)

★ ★ ★

நெடுந்தீவு கிழக்கு மாவிலித்துறை அருள்மிகு ஸ்ரீ பிடாரி அம்பாள், மேற்கு உயரப்புலம் ஐயனார் ஆகிய ஆலயங்களில் விசாகத்தை முன்னிட்டு எதிர்வரும் வியாழக்கிழமை பொங்கல் விழா நடைபெறும்.

(ஐ-111)

★ ★ ★

வடமராட்சி, மே 19

தென்புலோலி காந்தியூர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவமும், வேள்வியும் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளன.

(ஐ-173)

★ ★ ★

மட்டுவில் வடக்கு மகா முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனியன்று ஆரம்பமானது. உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை பொங்கல் உற்சவம் வழமை போல் இடம் பெறும்.

(ஐ-31)

★ ★ ★

செம்பியன்பற்று, மே 19

செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் ஆலய வருடாந்த திருநாள் கடந்த சனியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 26 ஆம் திகதி திருநாள் முடிவடையும். தினமும் மாலை 4 30 மணிக்கு செபமாலையுடன் நவநாள்களும் அனுஷ்டிக்கப்படுகின்றன. எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை நற்கருணை வழிபாடும் மறுநாள் காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் நடைபெறும்.

(ஐ-36)

★ ★ ★

வண்ணை கில்னர் ஒழுங்கை அருள் மிகு ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியது. உற்சவம் தொடர்ந்து எதிர்வரும் 31 ஆம் திகதிவரை நடைபெறும். 31 ஆம் திகதி சனிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும்.

(ஐ)

## தாதியர்கள் விடுதியில் படுக்கை வசதி இல்லை
### மாணவர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ். போதனா வைத்திய சாலையின் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் தங்கியிருந்து பயிற்சி நெறியைக் கற்கும் தாதிய மாணவர்கள் படுக்கை வசதியின்றி சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட 42 மாணவிகளும், இதற்கு முந்திய பிரிவு மாணவிகள் 38 பேரும் தற்போது பயிற்சிப் பாடசாலை விடுதியிலேயே தங்கிப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்கள் தங்குவதற்கான விடுதிக்கட்டடம் திருத்தியமைக்கப்பட்டுள்ள போதிலும் படுக்கைக்கான கட்டில் வசதிகள் இவர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-15)

## தீ மிதிப்பு

திருநெல்வேலி, மே 19

கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் ஆயலத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை விசாகத் தினத்தன்று பிற்பகல் 4 மணிக்குத் தீ மிதிப்பு நடைபெறவுள்ளது. (ஐ-135)

## செய்திச் சாரம்

### நூல் வெளியீடு

நவாலி, மே 19

சித்த மருத்துவக் கலாநிதி சே. சிவசண்முகராசாவின் ''சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி'' என்னும் நூலின் வெளியீட்டு விழா கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது. (ஐ-100)

### தாளையடியில் இயங்கும் பணிமனை

செம்பியன்பற்று, மே 19

மருதங்கேணி பிரதேச செயலகத்தின் நடமாடும் பணிமனை பிரதி வெள்ளிக் கிழமை தோறும் மருதங்கேணி தாளையடி வீதியில் உள்ள பிரதேச செயகத்தில் இயங்கி வருகிறது.

பாதுகாப்பு அரணுக்குள்—வத்திராயனுக்கும் தாளையடிக்கும் இடைப்பட்ட பகுதிக்குள்—வசிக்கும் மக்களின் நலன் கருதியே இப் பணிமனை அங்கு இயங்கி வருவதாக மருதங்கேணி பிரதேச செயலர் இ சிவபுண்ணியம் தெரிவித்தார். (ஐ-36)

### விவேகானந்தரின் கல்விச் சிந்தனைக் கருத்தரங்கு

திருநெல்வேலி, மே 19

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பருத்தித்துறை ஸ்ரீஇராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் ''சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்'' என்ற கருத்தரங்கு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் சு இரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-135)

### தொடர்கல்வி போதனாசிரியர் நேர்முகப் பரீட்சை

பருத்தித்துறை, மே 19

ஆசிரியர் தொடர் கல்விப் பாடநெறி போதனாசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சையை தேசிய கல்வி நிறுவகம் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

கணிதம், விஞ்ஞானம், உடநலக்கல்வி ஆகிய பாடநெறிகளின் போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 28 ஆந் திகதி யாழ் வலயம் 1 பணிமனையில் நடைபெறும் என தொலைக் கல்வித்துறைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார், (ஐ-118)

### குருபூசை

வடமராட்சி, மே 19

தொண்டமனாறு செல்வச் சந்நிதி அடியார் மடத்தின் இரண்டாவது பரிபாலகரான வைரமுத்து சுவாமிகளின் குருபூசை நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். குருபூசையைத் தொடர்ந்து அங்கு அன்னதானமும் இடம் பெறும். (ஐ-173)

### சாயி சமித்தியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 19

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.25 மணிமுதல் இலட்ச அர்ச்சனையும, பண்ணிசை, பஜனை என்பனவும் இடம் பெறவுள்ளன. ''பகவான் பாபாவும் புத்தபிரானும்'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும். (ஐ)

### அம்பனில் சிரமதானம்

செம்பியன்பற்று, மே 19

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தினரால் அம்பன் மத்திய மருந்தக சுற்றாடல் பகுதி அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (ஐ-36)

### கருத்தரங்கு

மானிப்பாய், மே 19

சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலைகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுக் கருத்தரங்கு இன்று திங்கள் பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ-90)

### சுழிபுரம் நூலகத்துக்கு நிதி ஒதுக்கீடு

சுழிபுரம், மே 19

சுழிபுரம் பிரதேச சபை பொது நூலகத்திற்கு புதிய நூல்கள் வாங்குவதற்காக ஒரு தொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையான நூல்களைத் தெரிவு செய்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-28)

### செபமாலை பக்தி முயற்சி

கொழும்புத்துறை, மே 19

யாழ். மறைக் கோட்டத்தின் பல பங்குகளிலும் பங்குக் குழுக்கள் நாட்டில் சமாதானமும், சுபீட்சமும் நிலவவேண்டி இல்லம் தோறும் சென்று செபமாலை பக்தி முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-30)

### சிறுவர் பாடசாலை ஆரம்பம்

கொழும்புத்துறை, மே 19

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், சரஸ்வதி மத்திய நூல் நிலையம் என்பவை- கூட்டாக இணைந்து நடத்தும் சிறுவர் பாடசாலை மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

(ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள ''சைனீஸ் பிளேற்றின்'' அச்சியந்திரம் ஏனைய அச்சுக் கூடத்திற்கு தேவையான பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இலக்கம் 01, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். [46981]

சகல விதமான TV றேடியோ, அசுற்சூரிய I.C டெக்பெல்ற், EHT. ராண்ஸ்போமர், அன்ரனா, அன்ரனா கிளிப், ஜங்சன்பொக்ஸ் விற்பனைக்குண்டு தொடர்பு: 310, பலாலி வீதி, ஆலடிச் சந்தி, கந்தர்மடம். [46920]

**WANTED BRIDE**

Hindu well connected educated parents are seeking for their Son good looking Bride under 30 years. from family of equal status. Apply To C/o No. 614, Uthayan, Jaffna. (46976)

**பாடசாலைப்பற்றுச்சீட்டு**

200 பற்றுச்சீட்டுக்கள் கொண்ட வசதிகள் சேவைகள் கட்டணப் பற்றுச் சீட்டும் புத்தகம் ஒன்று ரூ 70/- பாரதி பதிப்பகம் 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [47004]

**சோதிடம்**

சாதகக் குறிப்புகள் எழுத எதிர்கால வாழ்க்கை வசதிசன் சிறப்புகள் பற்றி ஆராய திருமணப்பொருத்தங்கள் பார்க்க சிவா, சோதிடம். 158, சோயில் வீதி. முடமாவடி நல்லூர், யாழ்ப்பாணம். [46996]

**நாடகமெழுதுவதெப்படி**

50 ரூபாவுடன் நாடகம் பற்றிய பலவிடயங்களை அறிந்து கொள்ளலாம் நாடகத்துறையில் ஈடுபட்டுள்ள எல்லோரும் வாசித்துப் பயனடையக்கூடிய நூல் 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதியது. [47016]

**மணமக்கள் தேவை**

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன்ற், ஆசிரியர், கிராமசேவகர், லெக்சறர் ஆகியோருக்கு மணமக்கள் தேவை. குறிப்பு, படத்துடன் தொடர்பு கொள்க: திருஞானசம்பந்த சர்மா, ஸ்ரீமுருகன் சோதிடநிலையம், நல்லூர் வடக்கு வீதி. [46982]

## தையற் பயிற்சி

(இரண்டாவது தொகுதி)

ஆரம்பமாகின்றது

**தூரிகை**

சட்டநாதர் வீதி, நல்லூர். (46972)

## புதிய வகுப்புகள்

★ கேக் ஐசிங்
★ பூவேலை
★ கூந்தல் அலங்காரம்

**ஆரம்பம்:**
**02 - 06 - 97**
திங்கள் மாலை 3. 30

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன.

**தூரிகை நுண்கலைகள்**

சட்டநாதர் வீதி, நல்லூர். (46973)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

வல்வெட்டித்துறை நகரசபையின் செயலாளராக இருந்து இன்று (19 - 05 - 97) ஓய்வுபெறும் போஷகர்

**உயர்திரு. என். ஞானவேல்**

அவர்களை நன்றியோடு நினைவு கூருகிறோம். போர்க்கால சூழ்நிலையிலும் நகரின் தேவைகளை இயன்றளவு பூர்த்தி செய்து ஆற்றிய சேவையினை பாராட்டுவதோடு இளைப்பாற்றுக் காலம் மனைவி, மக்களுடன் இனிதே அமைந்திட உளமார வாழ்த்துகிறோம்.

வல்வை நெடியகாடு
இளைஞர் விளையாட்டுக் கழகம்.

கணபதி படிப்பகம்,
வல்வெட்டித்துறை. (46995)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 05 — 04 — 1922



உதிர்வு: 19 — 04 — 1997

**திருமதி சின்னக்குட்டி தங்கம்மா**

பெற்று வளர்த்துப் பேணிக் காத்து
உற்றவாழ்வுகாண உயர்வுதந்து
பற்று மிகவைத்த தாயே — உன்னைப்
பற்றியிழுத்தனனே காலன் இங்கு
முற்றும் இழந்தவரா்ய் வாடி நின்று
கொற்றவன்தாள் வாழ்வையேசாந்தி கொள்வோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் அனுதாபம் தெரிவித்தும், பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (19-05-1997) மந்துவில் கிழக்கு சிவசுப்பிரமணியத்தின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் நேசக்கரம் கூப்பி அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

''நேசக்கரம்''
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம். (46998)

## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலி



உதிர்வு: 19 - 02 - 97

கடந்த 19 - 02 - 1997 இல் வலைப்பாடு கடலில் சங்கமமான எங்கள் அன்புத்தெய்வங்களான

**சின்னப்பொடி இராசலிங்கம்**
(LIONS CLUB)
மனைவி
**பத்மாவதி**
இரு புதல்விகளான
**பவதாரணி, தினேசனா**
(திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள்)

இவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துகொள்வதுடன் இன்று (19–05–1997) இடம் பெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மகள் நுசாந்தினி
மைத்துனர் தம்பிஜயா
சகோதரன் சத்தியநாதன் (சீலன்)

1/1, பலாலி வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (47007)

## ஓராண்டு நினைவலைகள்



**திருமதி தங்கம்மா வேலுப்பிள்ளை**

தோற்றம்: 03–05–1927
மறைவு: 29–05–1996
திதி: 19 — 05 — 1997

அன்பின் உறைவிடமே!
ஆண்டொன்று சென்றதம்மா
காண்பதெல்லாம் உன் அன்பு முகம்
ஊண் உறக்கமெல்லாம் எமக்காக அர்ப்பணித்து
நீண்ட பயணம் தான் நீ சென்றது ஏனம்மா?
பெண்பிள்ளை என்னைப் பெரிதாய்ச் சீராட்டி
கண்போன்ற உன் மகனைக் காணாது
கண் துயின்றாய்
மண் மீது உன் மருமகனை மாணிக்கம்
எனக் கொண்டாய்
விண் தேடுமுன்பு உனை வளர்த்த சிற்றன்னை
விடை பெறாது
என் கோடி தூரம் ஏகி நீ சென்றது ஏனம்மா?
சுற்றத்தைப் போற்றி உற்றார் உவந்திட
வாழ்ந்த தாயே.

என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டி நிற்போம்.

**குடும்பத்தினர்.**

விலாசம்:-
கோணன் வேவில்,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (46847)

## முன்றாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

**அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**
(முன்னாள் தலைவர், ப. நோ. கூ. சங்கம் நீர்வேலி.)
பிறப்பு: 30 - 01 - 1930
அநியாய அழிப்பு: 22 - 05 - 1994

**செல்வி சிவதர்சினி சின்னத்தம்பி**
(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி)
பிறப்பு; 29 - 10 - 1976
அநியாய அழிப்பு: 22 - 05 - 1994

திதி: 19 - 05 - 1997

அநியாய அழிப்பினால் தெய்வத்தோடு இரண்டறக் கலந்து விட்ட எம் ஆருயிர் தந்தைக்கும், அன்பு மகளுக்கும் அவர்களின் ஆத்ம சாந்திக்காக எங்கள் குல தெய்வம் நீர்வை அரசகேசரிப் பிள்ளையாரிடம் பிரார்த்தனை செய்கிறோம்.

உங்கள் நினைவால் வாடும்:
குடும்பத்தினர்

கரந்தன் சந்தி
நீர்வேலி மத்தி. (46830)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விவசாய விஸ்திரிப்பு

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு யூரியா ரக உரத்தையும் எடுத்து வரலாம் என்று அறிவிக்கப்படுகிறது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தலைமையில் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் மேற்படி ரக உரத்தைக் கொண்டு வருவதற்கு இருந்த தடையை நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஈழப் போர் இரண்டு தொடங்கிய சில மாதங்களில் வடக்கு—கிழக்குப் பகுதிக்கு யூரியா மற்றும் அமோனிய ரக உர வகைகளை எடுத்து வருவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

மேற்படி உர வகைகளில் இருந்து வெடிகுண்டுகள் மற்றும் வெடிப்பொருள்களைத் தயாரிக்க முடியும் என்பதால், பாதுகாப்புக் காரணங்களை முன்னிறுத்தியே அவை தடைசெய்யப்படுவதாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இதுவரை குடாநாட்டின் விவசாய வளர்ச்சியை விட பாதுகாப்புக் காரணங்களுக்கே முதலிடம் அளிக்கப்பட்டு வந்தது. சமீபத்தில் அமோனியா ரக உரத்தைக் கொண்டு வருவதற்கான தடை நீக்கப்பட்டது. அந்த உரம் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக மண்ணோடு கலந்தே விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இப்போது யூரியா மீதான தடையும் நீக்கப்பட்டிருக்கிறது. அனேகமாக அதுவும் மண்ணுடன் கலந்தே விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

வலிகாமம் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் குடாநாட்டின் விவசாயத்தை மீள்விக்கச் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவது உண்மையே. யாழ்ப்பாண விவசாயிகள் கடும் உழைப்பாளிகள் என்பதால் அவர்களுக்குத் தேவையான உள்ளீடுகளும் உபகரணங்களும் ஏனைய வசதிகளும் கிடைத்து விட்டால் அவர்கள் அத்துறையில் விரைவில் பழைய நிலையை எட்டுவார்கள்.

ஆனால் அவர்கள் தமது தொழிலைச் சுதந்திரத்துடனும் மனம் வைத்தும் உற்சாகத்துடனும் செய்யும் பழைய சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை என்பதனைக் கருத்திற் கொள்வது அவசியம். உதாரணமாக விவசாயிகள் வைகறைப் பொழுதில் தமது வயல்நிலங்களுக்குச்சென்று தொழிலை ஆரம்பிக்க முடியாது. விடிந்த பின்னரும் பல தங்கு தடைகளின் பின்னரே தொழில் நிலத்தை அடைய முடிகிறது. மேலும் விவசாயிகள் தமது விளை பொருள்களை அதிக விலை போகும் தூர இடங்களுக்குச் சென்று சந்தைப்படுத்த முடிவதும் இல்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை நியாய விலைகளில் சந்தைப்படுத்துவதற்கான உகந்த திட்டங்கள் வாய்ப்பு வசதிகள் இன்னும் இல்லை. வெங்காயம் மற்றும் மரக்கறிச் செய்கைகளில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட கைநட்டம் இதற்கு நல்ல உதாரணமாகும்.

விவசாயப் பெருக்கம், விரிவாக்கம் ஒரு பக்கமாக இருக்காமல் இரண்டு பக்கங்களாக நோக்கப்பட வேண்டும்; செயற்படுத்தப்பட வேண்டும்.

# பேச்சுக்கு இணங்கி புலிகள் கடிதம்: தமிழ்க் குழு எடுத்து வந்துள்ளதாம்!

## சண்டே ரைம்ஸ் வெளியிடும் தகவல் இது

கொழும்பு, மே 19

சமாதானப் பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகளின் இணக்கத்தைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றுடன் அமெரிக்காவில் உள்ள தமிழ் அமைப்பு தூதுக் குழு ஒன்று கொழும்பு வந்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் வசிக்கும்— தமிழ்ப் பிரமுகர்கள் அங்கம் வகிக்கும்— ஒரு தமிழ் அமைப்பின் தூதுக்குழு கடந்தவாரம் கொழும்பு வந்துசேர்ந்தது.

இந்தத் தூதுக்குழுவில் அமெரிக்காவில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்கு கல்வி பயிலும் தமிழர் ஒருவரும் அடங்குவார்.

இத் தூதுக்குழு எடுத்து வந்துள்ள விடுதலைப் புலிகளின் கடிதத்தில் அந்த அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் தமிழ்ச்செல்வனும் கையொப்பம் இட்டுள்ளனர்.

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சு நடத்தப் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

தூதுக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

அடுத்த வாரமளவில் இக்குழு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் முதல் கட்டப் பேச்சுக்களில் ஈடுபட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

— இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(உ-150-3)

## ஆசிரியர் தெரிவு நேர்முகப்பரீட்சை

தமிழ் மொழி மூலஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றிய பின்னர், யாழ்ப்பாணத்தில் நடந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போனவர்களுக்காக அடுத்த மாதம் 13ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

வடக்கு—கிழக்கு மாகாண சபை வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

இதே போன்ற நேர்முகப் பரீட்சை ஒன்று வவுனியாவில் அடுத்த மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு கடிதம் கிடைக்காதவர்கள் பிரதேச கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-3-150)

## கிழக்குப் பிரதேச புலிகள் பிரமுகர்களுடன் ஐ. தே. கவினர் பேச்சு

கொழும்பு, மே 19

விடுதலைப்புலிகளின் கிழக்கு தலைமைப்பீடப் பிரமுகர்களுக்கும், ஐ. தே. கட்சியின் பிரமுகர்களுக்கும் இடையில் உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்கள் கிழக்கில் இடம்பெற்றதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பேச்சின் போது — நேரடிப் பேச்சு நடத்துவதாயின் எந்த நாட்டில் அதனை நடத்தலாம் என்று விடுதலைப் புலிகள் பிரமுகர்களிடம் ஐ. தே. கட்சிப் பிரமுகர்கள் கேட்டனராம்.

''பேச்சுக்கள் நடத்த இது உரிய நேரம் அல்ல''— என்று விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அவர்களிடம் தெரிவித்தனர்.

—இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(உ-150-3)

## பயிற்சிக்கு நடுவே தப்பியோடிய 300 காவலர்கள்!

கொழும்பு, மே 19

வவுனியாவில் இரண்டு வாரகால பயிற்சிக்குப் பின்னர் நவீன ஆயுதங்களுடன் யாழ்ப்பாணத்தில் பணியாற்ற அனுப்பப்படவிருந்த முந்நூறு பாதுகாப்பு ஊழியர்கள் பயிற்யை இடைநடுவில் கைவிட்டு கொழும்புக்கு தப்பிச் சென்றனர் என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

மாகாணசபை, பிரதேசசபை மற்றும் ஐ. தே. கட்சி எம். பிக்களுக்கு பாதுகாப்பு வழங்கிவந்த 300 பாதுகாப்பு ஊழியர்கள் 2 வார காலப் பயிற்சிக்காக வவுனியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

இரு வாரகால பயிற்சி முடிந்ததும், தம்மை நவீன ஆயுதங்களுடன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதை அறிந்த அந்த 300 பேரும், இரவோடு இரவாக லொறிகளில் ஏறிக் கொழும்புக்குத் திரும்பிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நடுத்தர வயதுடையவர்களும், ஓய்வூதியர்களும் இவர்களில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-150-3)

## முஸ்லிம் கௌரவம் பேணும் தீர்வு தேவை

### ஹக்கீம் கூறுகின்றார்

கொழும்பு, மே 19

முஸ்லிம்களின் கௌரவம் இன்னொரு இனத்தினது காலுக்குக் கீழ் மிதிபடாத வகையில் அமைந்த - சுயாட்சி அதிகாரம் கொண்ட —மாகாண அலகே முஸ்லிம்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும்.

முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான ரவூக் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத் திறப்பு விழா கடந்த வெள்ளி நடந்த சமயம் அங்கு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

(உ-3)

## விஜயபால மெண்டிஸை பதவி விலக கோரிக்கை

கொழும்பு, மே 19

ஐ. தே. கவின் நீர்கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் பிரதமகொறடாவுமான விஜயபால மெண்டிஸை எம். பி. பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யுமாறு ஐ தே. க. தலைமைப்பீடம் கேட்டிருக்கிறது.

முன்னைய ஐ. தே. கட்சி ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்த அவர், அரச காணிகள் பங்கிடப்படும் போது பல அரச காணிகளை தம் வசப்படுத்தியமை தற்போது தெரிய வந்துள்ளதாகவும் —

காணிப்பங்கீடு தொடர்பான ஊழல்களை விசாரித்து வரும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகளிலும் இவரது ஊழல்கள் தொடர்பான தகவல்கள் வெளிவந்துள்ளதாகவும் —

இதையடுத்தே இவரை இராஜினாமாச் செய்யுமாறு ஐ. தே. க. தலைமைப்பீடம் கேட்டிருப்பதாகவும் —

கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(உ-150-3)

## சேதமுற்ற விமானம் மீண்டும் சேவைக்கு

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்த 'வை 8' ரக விமானம் ஒன்று திருத்த வேலைகளின் பின்னர் அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களில் மீண்டும் சேவைக்காக கொழும்பு வந்து சேரவிருக்கிறது.

திருத்த வேலைகளுக்காக இந்த விமானம் சீனாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

தற்சமயம் திருத்த வேலைகள் முடிவடைந்து இந்த விமானம் இலங்கை வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானத்தை எடுத்து வருவதற்காக விமானப்படை அதிகாரிகளான ஜயலத் வீரக்கொடியும், குறூப் கப்டன் சல்காதும் சீனாவுக்கு செல்லவுள்ளனர்.

(உ-3-150)

## குடாநாட்டில் 3 பிரிவுகளுக்கு உ. அரச அதிபர்களை நியமிக்க நடவடிக்கை

கொழும்பு, மே 19

யாழ். மாவட்டத்தில் உள்ள வலி. வடக்கு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு உதவி அரசாங்க அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த புதன் கிழமை நடந்த— உயர்மட்ட மாநாட்டில் இது தொடர்பாக ஆராயப்பட்டது.

போதிய நிர்வாக அதிகாரிகள் இல்லாததால் இந்தப் பகுதிகளுக்கு உதவி அரசாங்க அதிபர்களை நியமிக்க முடியாதுள்ளதாக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அதிகாரிகளை இப்பதவிகளுக்கு நியமிக்கலாம் என்றும் அங்கு யோசனை ஒன்று தெரிவிக்கப்பட்டது.

இந்த யோசனை நடைமுறையில் சாத்தியமற்றது என்று அங்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து—

வடக்கு —கிழக்கு மாகாண சபை ஆளுநருடன் தொடர்பு கொண்டு இந்த வெற்றிடங்களை நிரப்புவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்தது. (உ-150-3)

## வள்ளங்கள் கடத்தப்பட்டன

மட்டக்களப்பு, மே 19

வாழைச்சேனைக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களின் 39 வள்ளங்கள், மீன்பிடி உபகரணங்களுடன் இனந்தெரியாதோரால் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

சுமார் 2 கோடி 60 இலட்சம் ரூபா பெறுமதியான வள்ளங்களும், உபகரணங்களும் அபகரித்துச் செல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-21)

## சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, மே 19

மட்டக்களப்பு தளவாய்ப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழு ஒன்றின் உறுப்பினர்கள் நேற்று விடியும் வேளை பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் இவர் உயிரிழந்ததாகவும் —

இவருடன் வந்த ஏனைய மூவர் தப்பிச் சென்று விட்டதாகவும் —

உயிரிழந்தவரின் சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் —

மட்டக்களப்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(உ-21)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு புடைவைகள்

யாழ்ப்பாணம், மே 19

வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உடுபுடைவைகள் வழங்கும் வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறும்.

கொழும்பு இந்துமா மன்றம் அனுப்பியுள்ள இந்த உடுபுடைவைகள் யாழ். இந்துசமயப் பேரவையினரால் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

(ஐ)

**நாளை**

**வைகாசி 6**

செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி பிற்பகல் 2.46 வரை.

நட்சத்திரம்: சுவாதி முழு நாளும்

சுபநேரம்: 10. 22 - 11.52

ராகுகாலம்: 2.52 - 4.22

[illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கோண்டாவில் மேற்கு (உப்புமடம்)

## ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார்

ஆலய

## சிற்பத்தேர் அச்சுப்பார் ஏற்றுவிழா

மேற்படி ஆலய புதிய சிற்பத்தேருக்கான அச்சுப்பார் ஏற்றுவிழா நாளை (20-05-97) செவ்வாய்க்கிழமை தேர் உற்சவ தினத்தில் காலை 9-00 மணியளவில் விநாயகர் திருவருளோடு ஸ்ரீகாளிகா சிற்பாலயக் கலைஞர்களால் நடத்தப்படும்.

**தேர் நிர்மாணிப்பு:**

ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ

**செ.பாலச்சந்திரன் குழுவினர்**

**ஸ்ரீ காளிகா சிற்பாலயம், புத்தூர்.**

(47029) - தேர்த் திருப்பணிச்சபை

உ

கந்தர்மடம் - அரசடி வீதி அருள்மிகு

## செல்வ நாகபூஷனி அம்பாள்

திருக்கோயில்

## தீ மிதிப்பு விழா

எதிர்வரும் **21 - 05 - 97** புதன்கிழமை வைகாசித் திங்கள் 7 ஆம் நாளன்று மாலை 4 மணிக்கு தீ மிதிப்பு நடைபெறும்.


''மக்கள் இடம்பெயர்ந்து போன வேளையில் அம்பாள் கரவெட்டி அத்துலு கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கடந்த வருடம் பங்குனி கடைசித் திங்களன்று அடியார்கள் மத்தியில் தோன்றினார். அப்போது, யாரும் இனி இடம்பெயரவேண்டாம். நாம் எல்லோரும் சொந்த இடங்களுக்கு சித்திரை மாதம் 16 ஆம் திகதிக்கும் வைகாசி மாதம் 16 ஆம் திகதிக்கும் இடையில் செல்வோம் என்று கூறினாள். தமது ஆலயத்திற்குச் சென்று ''மக்கள் துயர்தீர்க்க, நாட்டின் அமைதி வேண்டி வைகாசி விசாகத்திலன்று தீயில் இறங்குவேன்'' என்று கூறியதற்கிணங்க எதிர்வரும் வைகாசி விசாகத்தன்று தீ மிதிப்பு நடைபெறவுள்ளது.

அடியார்களும் தங்கள் பங்களிப்பைச் செய்து நிதி உதவி, பொருளுதவி தந்து அதில் கலந்து அம்பாளின் அருளைப்பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

அம்பாள் அடியார்கள்,

(47022) ஆலய தர்மகர்த்தா செ. குகநாதன்

# 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



## செல்வன் குமாரசாமி சர்வானந்தன்

(முன்னாள் மாணவ தலைவன்,
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

அன்னை மடியில்: **10 – 04 – 1964**
ஆண்டவன் அடியில்: **21 – 05 – 1986**

**திதி: 19 - 05 - 97**

அன்பு மகனே!
ஆண்டுகள் ஓடலாம்
காலங்கள் மாறலாம் — ஆனால்
நோயெனும் காலனால் — நீ
மறைந்தது மாறுமோ?
எம், மனதின் மூலையில்
உன், உருவம் பதிந்து
நினைவுகள் தருவதால்
நித்தமும் — நீ
எம்முடன் வாழ்கிறாய்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
**அப்பா, அம்மா, சகோதரர்கள்,**
**அம்மம்மா, உறவினர்கள், நண்பர்கள்.**

25, பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி/737)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# புதிய பிரி. வெளியுறவு அமைச்சருக்கு

# இலங்கை விடயம் நன்கு பரிச்சயம்

கொழும்பு மே 19

''பிரிட்டனின் புதிய வெளிவிவகார அமைச்சராக பதவி ஏற்றுள்ள டெரக் ஸட்ஷெட் (Derek Satchett) இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை நன்கு அறிந்தவர்.''

கொழும்பில் இருந்து வெளிவரும் ''சண்டே ரைம்ஸ்'' இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் லண்டனில் இயங்கும் சர்வதேச தமிழர் சம்மேளனம் ஏற்பாடு செய்த 'சுயநிர்ணயம் கோரும் தமிழர் போராட்டம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் அச்சமயம் எதிர்க்கட்சி எம்.பியாக இருந்த டெரக் பங்குபற்றினார்.

''இலங்கை இனப்பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வு தேவை. இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரினால்தான் தீர்வுகாண முடியும். தமிழ் மக்களின் சட்ட பூர்வமான அபிலாஷைகளுக்கான சுயாட்சிப் போராட்டம் அங்கீகரிக்கப்படவேண்டும்''— என்று அக்கலந்துரையாடலில் பேசுகையில் அவர் கூறியிருந்தார்.

லண்டனில் இருந்து வெளியிடப்படும் 'ஹொட் ஸ்பிரிங்' பத்திரிகையின் முன் பக்கத்தில் அவருடைய படத்துடன் இதுபற்றியசெய்தி அப்போது பிரசுரமாகியிருந்தது.

எதிர்க்கட்சியில் இருந்த சமயம் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் கூடிய அக்கறையுடன் செயற்பட்டவர் கைகளில் தற்சமயம் அப்பிரச்சினை விவகாரம் போய்ச் சேர்ந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் இணக்க நிலையை ஏற்படுத்தி, இனப்பிரச்சினை தீர்வில் முன்நின்று செயற்பட்ட முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் தொடங்கி வைத்த முயற்சியை இவர் தொடர்வாரா என்பதுதான் இப்போதைய கேள்வியாகும்.

இந்த முயற்சியை பிரிட்டனின் புதிய அரசாங்கம் தொடருமாயின் டெரக்கே அதைக் கையாள்வார்.

பிரிட்டிஷ் தேர்தலுக்கு முன்னர் லியம் பொக்ஸ் டெரக்கை சந்தித்து அவரின் இணக்கத்தை அப்போது பெற்றிருந்தார்.

தற்போது பேச்சுக்கள் தொடங்குமா? இராணுவ நடவடிக்கையின் பின் தொடருமா? என்பதுதான் இப்போதுள்ள கேள்விகளாகும். —இப்படி அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

(உ-3-150)

## 5 தமிழக மீனவர் கைது

கொழும்பு, மே 19

நயினாதீவுக் கடலில் வைத்து ஐந்து இந்திய மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படை நேற்று முன் தினம் இரவு கைது செய்ததாகத் தெரியவருகின்றது.

தமிழ்நாட்டிலிருந்து எரிபொருளைக் கடத்தி வந்து விடுதலைப் புலிகளுக்கு விற்கும் நடவடிக்கையில் இந்த மீனவர்கள் ஈடுபட்டிருந்ததாகவும்

நாச்சிக்குடாவில் இருந்து புறப்பட்டு தமிழகத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் —

அச்சமயம் இவர்கள் வசம் ஐந்து இலட்சம் ரூபா வரை ரொக்கப் பணம் இருந்ததாகவும் —

படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

## நெடுங்கேணியை...

(முதலாம் பக்கத் தொடர்)

புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் — கைப்பற்றிய பகுதிகளை பலப்படுத்துவதில் – படையினர் நேற்று மும்முரமாக இருந்தனர் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

நேற்று புலிகளின் நிலைகளின் மீது படையினர் தொடர்ந்து ஷெல் மாரி பொழிந்தனர். பரவலாக பல இடங்களிலும் தொடர்ந்து விமானத் தாக்குதல்களும் இடம்பெற்றன. அவற்றில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

அதேசமயம் ஓமந்தைக்கு வடக்கேயிருந்து புலிகளால் ஏவப்பட்ட ஷெல்கள் நொச்சி மோட்டைப் பகுதியில் வீழ்ந்தன. (உ)

# இடம்பெயர்ந்தோர் பாடசாலைகளில்!

வன்னியில் தற்போது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கு இடம்பெயர்ந்த மக்கள் பல பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு ம. வியில் 107 குடும்பங்களும், முல்லைத்தீவு ம. வியில் 108 குடும்பங்களும், மண்டுவம் ம. வியில் 56 குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளன.

ஓமந்தை, புளியங்குளம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 3 ஆயிரத்து 500 பேர் புதுக்குளம், பெரியகுளம், நொச்சிக்குளம், கல்மடு, புதூர் ஆகிய இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உதவிகளை வவுனியா அகதிகள் முன்னணி மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளை ஆகியன வழங்கி வருகின்றன. (உ-164-3)

## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேரடியாக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு தங்கி நின்று வைத்திய வசதிகளை கண்காணித்து வருகின்றார்.

மாகாண சுகாதார அமைச்சர் தலைமையிலும் அதிகாரிகள் குழு ஒன்று அங்கு நேரடியாக களத்தில் குதித்துள்ளது. அரசு அவசரமாக மேலதிகமாக ஐந்து அம்புலன்ஸ்களை அங்கு அனுப்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

## முல்லைத்தீவை...

(முதலாம் பக்கத் தொடர்)

ளன.

பிரிகேடியர் வசந்த பெரேரா தலைமையில் இந்த நடவடிக்கை இடம்பெறுகிறது. பிரிகேடியர் நந்தா மல்லவாராய்ச்சி அவருக்கு உதவியாகச் செயற்படுகின்றார்.

கடந்த 14 வருடமாக இடம்பெற்று வரும் யுத்தத்தில் படையினர் மேற்கொண்டுள்ள பெரிய இராணுவ நடவடிக்கை இதுவாகும். — இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது (உ-150-3)

## புலிகளுக்கு இழப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்ந்த —பொட்டம்மானுக்கு மிக நெருக்கமானவரான — குட்டி என்பவரையும் ரவி, விக்கி ஆகிய சிரேஷ்ட தலைவர்களையும் உள்ளடக்கி நூறுக்கும் அதிகமான புலிகள் கொல்லப்பட்டனர் என அரசுத் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

## கப்பல் பயணத்துக்கு பதிவு செய்த யாழ். பல்கலைக்கழக மாணவர் கவனத்துக்கு

இன்று திங்கட்கிழமை (19 - 05 - 97) எமது அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை உடன் பெற்று நிரப்பித்தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**- செயலாளர்**

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம். (47021)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா நடராசா

மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசம்மா நடராசா 17 - 05 - 1997 இல் காலமானார்.

அன்னார் வி. நடராசாவின் அன்பு மனைவியும், கெங்கேஸ்வரன் (ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி), இராசதுரை (நகரசபை, சாவகச்சேரி), சிவபாலன் (கனடா), இராணிதேவி, இராஜேஸ்வரி, வசந்தராணி, வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவஜோதி, இராசபூபதி, துரைச்சாமி, சோமசுந்தரம், நந்தினி, சரவணமுத்து, அருமைத்துரை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18-05-97) அவரது இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்**

(சி/742)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org